# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2022 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆம் திகதிய*
## பகுதி II இற்குக் குறைநிரப்பி

*(2022.02.11 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


# குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தம்)

***1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*நீதி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

### *சட்டப்பயன் பற்றிய கூற்று*

***வாசகம் 2*** : *இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 442 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது, வழக்குக்கான திறந்தவர்களுள் ஒவ்வொருவருக்கும் தீர்ப்பின் அல்லது பதிவேட்டின் இறுதிக் கட்டளையின் ஒரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதியை வழங்குவதற்கு ஏற்பாடுசெய்வதாகும்.*

***வாசகம் 3*** : *இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 443 ஆம் பிரிவைத் திருத்துவதுடன் 2 ஆம் வாசகத்தினால் செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகும்.*

## குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை
## (திருத்தம்)

*ச.வ.- ஓ. 45/2017*

### *1979* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கை முறைச் சட்டக்கோவைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப்பெயர்

***1.*** இச்சட்டம், *2022* ஆம் ஆண்டின் ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கச் சட்டத்தின் 442ஆம் பிரிவை மாற்றீடு செய்தல்*

***2.*** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) *1979* ஆம் ஆண்டின் *15* ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் *442* ஆம் பிரிவு இத்தால் நீக்கப்பட்டு அதற்குப் பதிலாகப் பின்வரும் பிரிவு இடப்படுகின்றது:-

"ஒரு தீர்ப்பின் அல்லது இறுதிக் கட்டளையின் அல்லது ஏதேனும் வாக்குமூலத்தின் அல்லது பதிவேட்டின் வேறு பாகத்தின் பிரதிகள்

*442.* ஒரு குற்றவியல் நீதிமன்றத்தின் தீர்ப்பொன்றினால் அல்லது இறுதிக் கட்டளையினால் பாதிக்கப்பட்ட எவரேனுமாள் அத்தீர்ப்பின் அல்லது இறுதிக் கட்டளையின் அல்லது ஏதேனும் வாக்குமூலத்தின் அல்லது பதிவேட்டின் வேறு பாகத்தின் பிரதியொன்றைப் பெறுவதற்கு விரும்பினால், அவர் அத்தகைய பிரதிக்காக விண்ணப்பிப்பதன் மீது, வர்த்தமானியில் வெளியிடப்படும் அறிவிப்பின்மூலம் காலத்துக்குக் காலம் நீதி எனும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினால் குறித்துரைக்கப்பட்ட கட்டணமொன்றை அதற்காகக் கொடுப்பனவு செய்வதன்மேல், நீதிமன்றம் ஏதேனும் விசேட காரணத்துக்காகக் கட்டணமின்றி அதனைக் கொடுத்துதவுவது தகுதியானதெனக் கருதினாலொழிய, நீதிமன்றத்தினால் அது அவருக்குக் கொடுத்துதவப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், முறையான வழக்கின் முறைப்பாட்டாளர் மற்றும் குற்றஞ்சாட்டப்பட்ட ஆள் ஒவ்வொருவருக்கும், தீர்ப்பின் அல்லது

பதிவேட்டின் இறுதிக் கட்டளையின் ஒரு சான்றுப்படுத்தப்பட்ட பிரதி கட்டணமின்றிக் கொடுத்துதவப்படுதல் வேண்டும்.”.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 443 ஆம் பிரிவைத் திருத்துதல்*

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 443 ஆம் பிரிவு, அதன் (ஆ) என்னும் பந்தியில், “நானூற்றிநாற்பத்திரெண்டாம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வீதங்களில் கொடுப்பனவு செலுத்தப்பட்டதன்மேல்” என்னும் சொற்களுக்குப் பதிலாக “நானூற்றிநாற்பத்திரெண்டாம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய” என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*

4. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்